## 4.30 வாரச் சந்தை மூலமாக விற்பனை செய்வதற்கு வாரச் சந்தையில் இலவசமாக இடம் ஒதுக்கீடு

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

அரசாணை (நிலை) எண். 168 நாள் : 01.09.2003

படிக்க :

தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கடித எண்.3051/டி1/2003, நாள்.22.05.2003

**ஆணை**

2003–2004ம் மானியக் கோரிக்கையின் மீது சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் அறிவிப்பினை அறிவித்தார்கள்:–

“மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்த பொருட்களை வாரச்சந்தை மூலமாக விற்பனை செய்வதற்கு வாரச்சந்தையில் இலவசமாக இடமளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை வழங்கப்படும்”

2. இப்பொருள் குறித்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தொடர்பு கொண்டதில், மகளிர் சுய உதவிக்குழுக்கள் பல்வேறு தகுதிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் வெளிப்புறக் கடனுதவிகள் பெற இணைக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார். இதன் மூலம் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடவும் அவர்தம் இருப்பிடத்திலேயே கிடைக்கும் மூலப் பொருட்களின் உதவியுடன் பொருட்கள் தயாரிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. தற்சமயம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் வட்டார அளவிலான குழு கூட்டமைப்பு மற்றும் பஞ்சாயத்து அளவிலான குழுக் கூட்டமைப்பின் மூலம் நடைபெறும் கூட்டங்கள், வீடுகள் தோறும் சென்று விற்பது, உள்ளூர் கடைகள் மற்றும் மாவட்ட / மாநில அளவிலான பொருட்காட்சிகள் போன்ற இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. உள்ளூர் மக்களிடையே மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தயாரிக்கும் பொருட்களுக்கு அதிக விழிப்புணர்ச்சி ஏற்பட விளம்பரம் மற்றும் விற்பனை செய்வதற்காக உள்ளூர் வாரச்சந்தைகளில் தகுதியுள்ள இடத்தினை ஒதுக்கீடு செய்யுமாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் வேண்டியுள்ளார். மேலும், வாரச்சந்தையில் இடம் ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் உள்ளதால், அரசு இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சுய உதவிக்குழுவினர் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்து பொருள் ஈட்டிட வாரச்சந்தையில் கட்டணம் எதுவும் இன்றி இலவசமாக தேவைப்படும் இடத்தினை வழங்குமாறு கோரியுள்ளார். இது குறித்து தக்க ஆணை வெளியிட்டால் மகளிர் சுய உதவிக்குழுக்கள் அதிக பயனடைவர் எனவும் கருத்து தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு ஆராய்ந்து வாரச்சந்தை நடைபெறும் இடங்களில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்திட கட்டணமின்றி இலவசமாக தற்காலிகமாக இடஒதுக்கீடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. மேற்காணும் இடத்தில் நிரந்தர கட்டிடம் கட்ட வேண்டுமாயின் உரிய கருத்துருக்கள் நில நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு அனுப்பி ஆணை பெற்ற பின்பே ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.486/து.செ.(வி.என்.பி.)/2003/ நாள்.27.08.2003 ஒத்திசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி.கே.கரியாலி**
அரசு செயலாளர்